ஆகாய் - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 557 - 525 ஆம் வருஷங்களில் ஆகாய் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

ஆகாய் தீர்க்கதரிசி. (ஆகாய் 1:1-3,13; ஆகாய் 2:1,10,13,20).

ஷமயக்கருத்து

பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு எருசலேமில் தேவனுடைய ஆலயம் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது. பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்கள் புதிய நம்பிக்கையோடு தேவாலயத்தைக் கட்ட வேண்டுமென்று ஆகாய் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். தேவனுடைய ஆலயம் பாழாய்க்கிடக்கும்போது ஜனங்கள் தங்களுடைய வீடுகளில் சுகமாய்க் குடியிருப்பதை ஆகாய் கடிந்து கொள்கிறார். (ஆகாய் 1:2-15).

புதிய இஸ்ரவேல் தேசத்தின் தலைவர்களுக்கு ஆகாய் கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறார். கர்த்தர் அவர்களோடு கூட இருக்கிறார். அவர்களுடைய எல்லாப் பிரச்சனைகளிலும் அவர் அவர்களுக்கு உதவி புரிகிறார். ஆகையினால் அவர்கள் திடன் கொண்டு பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

புதிய தேவாலயத்தின் வருங்கால மகிமையைக் குறித்தும் ஆகாய் விவரித்துக் கூறுகிறார். மேசியாவின் வருங்கால மகிமையையும், நித்திய மகிமையையும் விவரிக்கிறார். (ஆகாய் 2:1-9).

ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் வானங்களும், பூமியும் புதுப்பிக்கப்படும் என்னும் செய்தியும் ஆகாய் புஸ்தகத்தில் இரண்டு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ஆகாய் 2:6,20-23, எபி12:24-28, 2பேதுரு 3:5-13) கர்த்தர் சகல ஜாதிகளாலும், விரும்பப்பட்டவராக வருவார். (ஆகாய் 2:7)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 2

வசனங்கள் - 38

கேள்விகள் - 8

புதிய தீர்க்கதரிசனங்கள் - 3

கட்டளைகள் - 9

வாக்குத்தத்தங்கள் - 3

முன்னறிவிப்புக்கள் - 14

ஆகாய் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (ஆகாய் 1:1,12; ஆகாய் 2:1,10,20). இந்த ஐந்து செய்திகளையும் 23 பகுதிகளாகப் பிரிக்கலாம். கர்த்தர் தம்மூலமாகப் பேசுவதாக ஆகாய் 23 இடங்களில் உறுதிபண்ணுகிறார். (ஆகாய் 1:1-3, 5,7,12-13; ஆகாய் 2:1,4,6-11,14,17,20,23).

பொருளடக்கம்

I. காலமும் பொருளும் (1:1-2)

II. மீட்கப்பட்ட யூதாவிற்கு தீர்க்கதரிசனம்

1. ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு - காரணம் (1:3-11)
2. வேலை உற்சாகப்படுத்தப்படுகிறது (1:12-15)

III. தேவாலயங்களைப் பற்றிய செய்தி

1. சாலொமோனின் தேவாலயம் பற்றியது (2:1-5)
2. வானத்தையும் பூமியையும் அசையப் பண்ணுவார் (2:6)
3. மேசியாவின் இரண்டாம் வருகையும் ஆயிர வருஷ தேவாலயமும் (2:7-9)

IV. ஆசாரியர்களுக்குச் செய்தி

1. கேள்விகள் - சரியான பதில்கள் (2:10-13)
2. யூதாவிற்குப் பொருந்தும் (2:14-19)

V. புறஜாதி தேசங்களை அகற்றமேசியாவின் இரண்டாம் வருகை (2:20-23)

ஆகாய் - தொகுப்புரை

1 அதிகாரம்

ஆகாய் 1:1 ராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் முதலாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுக்கும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுக்கும் உண்டாகி, அவர் சொன்னது என்னவென்றால்:

ஆகாய் 1:2 இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"ஆகாய்" - இந்தப் பெயருக்குப் "பண்டிகை" **"festival"** என்று பொருள். பாபிலோனிய சிறையிருப்புக்குப் போன பின்பு தீர்க்கதரிசனம் கூறியவர்களில் இவர் முதலாவது தீர்க்கதரிசி. (ஆகாய் 1:1,3,12; ஆகாய் 2:1,13-14,20; எஸ்றா 5:1; எஸ்றா 6:14).

"ராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம்" - கோரேசு ராஜா ஆணை பிறப்பித்து, 16 வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எஸ்றா 1:1-4).

ஆகாயின் விசேஷித்த செய்திகள்

1. ராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் முதலாந்தேதி (ஆகாய் 1:1-11)
2. தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் ஆறாம்மாதம் இருபத்து நாலாந்தேதி (ஆகாய் 1:12-15)
3. தரியு ராஜாவின் ஆறாம் வருஷம் ஏழாம் மாதம் இருபத்தோராந்தேதி (ஆகாய் 2:1-9)
4. தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதி (ஆகாய் 2:10-19)
5. தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதி (ஆகாய் 2:20-23)

"செருபாபேல்" **(Zerubbabel)** - இந்தப் பெயருக்கு "பாபிலோனில் விதைக்கப்பட்டவன்" **"sown in Babylon"** என்று பொருள். இவன் தாவீதின் வழியில் யூதாவின் ராஜகுலத்தில் பிறந்திருக்கிறவன். யூதா பெர்சிய தேசத்து மாகாணமாக இருந்தபோது, இவன் யூதாவின் அதிபதியாக இருக்கிறான். (ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2-4,21-24; 1நாளா 3:19; எஸ்றா 2:2; எஸ்றா 3:2,8; எஸ்றா 4:2-3; எஸ்றா 5:2; நெகே 7:7; நெகே 12:1,47; சக 4:6-10). மறுபெயர் சொரோபாபேல் **(Zorobabel)** (மத் 1:12-13; லூக்கா 3:27).

"செயல்த்தியேல்" **(Shealtiel)** - இந்தப் பெயருக்குத் "தேவனிடத்தில் கேட்டேன்" **"I have asked of God"** என்று பொருள். இவன் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன், அல்லது எகொனியாவின் குமாரன். இவன் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப் பட்டான். (ஆகாய் 1:1,12,14; ஆகாய் 2:2,23; எஸ்றா 3:2,8; எஸ்றா 5:2). மறுபெயர் சலாத்தியேல் **(Salathiel)** (1நாளா 3:17; மத் 1:12; லூக்கா 3:27).

"யோசுவா" **(Joshua)** - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் இரட்சிப்பாயிருக்கிறார்" **"Jehovah is salvation"** என்று பொருள். யூதா தேசத்தார் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன பின்பு, இவன் முதலாவது பிரதான ஆசாரியனாக இருந்தான். (ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2-4; சக 3:1-9; சக 6:11).

"யோத்சதாக்" **Josedech** - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் நீதியாயிருக்கிறார்" **"Jehovah is righteous"** என்று பொருள். (ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2-4; சக 6:11).

"கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை" - யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்புக்குப்போனபின்பு, தேவாலயத்தின் கட்டுமான வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை.

ஆகாய் - தொகுப்புரை

1 அதிகாரம்

II. மீட்கப்பட்ட யூதாவிற்கு தீர்க்க தரிசனம் - (ஏசா 5:5)

1. ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு - காரணம்

ஆகாய் 1:3 ஆனாலும் ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொல்லுகிறார்:

ஆகாய் 1:4 இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?

ஆகாய் 1:5 இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள்.

ஆகாய் 1:6 நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விட வில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்.

ஆகாய் 1:7 உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகாய் 1:8 நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகாய் 1:9 அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்தும், நான் அதை ஊதிப்போடுகிறேன்; எதினிமித்த மென்றால், என் வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகாய் 1:10 ஆதலால் உங்கள்மேல் இருக்கிற வானம் பனியைப் பெய்யாமலும், பூமி பலனைக் கொடாமலும் போயிற்று.

ஆகாய் 1:11 நான் நிலத்தின்மேலும், மலைகளின் மேலும், தானியத்தின் மேலும், புதுதிராட்சரசத்தின் மேலும், எண்ணெயின்மேலும், பூமியில் விளைகிற எல்லாவற்றின் மேலும், மனுஷரின் மேலும், மிருகங்களின் மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் வறட்சியை வருவித்தேன் என்றார்.

ஆகாய் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். (ஆகாய் 1:5,7)
2. நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வாருங்கள். (ஆகாய் 1:8).
3. ஆலயத்தைக் கட்டுங்கள்
4. செருபாபேலோடு சொல்லுங்கள். (ஆகாய் 2:2).
5. நீ திடன் கொள் (ஆகாய் 2:4).
6. பயப்படாதேயுங்கள். (ஆகாய் 2:5).
7. ஆசாரியரிடத்தில் வேத நியாயத்தைப் பற்றிக் கேள் (ஆகாய் 2:11).
8. இப்போதும் இதற்கு முந்தின காலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள் (ஆகாய் 2:18).
9. செருபாபேலோடு சொல். (ஆகாய் 2:21).

ஆகாய் – தொகுப்புரை

1 அதிகாரம்

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் அனுபவங்கள்

1. திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டுவருகிறார்கள் (ஆகாய் 1:6).
2. புசித்தும் திருப்தியாகவில்லை.
3. குடித்தும் பரிபூரணமடையவில்லை.
4. வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை.
5. கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்.

"உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்" - ஆகாய் புஸ்தகத்தில் சிந்தித்துப் பாருங்கள் என்னும் வாக்கியம் 4 முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. (ஆகாய் 1:5,7; ஆகாய் 2:15,18).

"ஆலயத்தைக் கட்டுங்கள்" - சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் ஆலயத்தைக் கட்டுவதற்கான பொருட்களைச் சேகரித்து ஆலயத்தைக் கட்ட வேண்டும். மோசேயின் ஆராதனை முறைமைகளை அவர்கள் மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும்.

தேவாலயத்தைக் குறித்து இஸ்ரவேலுக்குக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம்

1. அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன்.
2. அதினால் என் மகிமை விளங்கும்

யூதர்கள் வளம்பெறாததற்குக் காரணம்

1. கர்த்தருடைய வீடு பாழாய்க் கிடக்கும் போது, அவர்கள் அதைக் கட்டுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
2. அவர்கள் எல்லோரும் சுயநலமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளைக் கட்டி, அவற்றில் சுகமாய்க் குடியிருக்கிறார்கள். தேவனுடைய வீட்டைக் குறித்து அவர்கள் எந்த அக்கறையும் எடுக்கவில்லை.

தேவனுடைய ஆலயத்தை அசட்டை பண்ணியதால் வந்த சாபங்கள்

1. வானம் பனியைப் பெய்யவில்லை.
2. பூமி பலனைக் கொடுக்கவில்லை.
3. நிலத்தின்மேலும், மலைகளின்மேலும், தானியத்தின்மேலும், புது திராட்சரசத்தின் மேலும், எண்ணெயின் மேலும், பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும், மனுஷரின் மேலும், மிருகங்களின்மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் வறட்சி உண்டாயிற்று. (ஆகாய் 1:11)

2. வேலை உற்சாகப்படுத்தப்படுகிறது

ஆகாய் 1:12 அப்பொழுது செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனும், ஜனத்தில் மீதியான அனைவரும் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்கும், தங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பின ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்கும் செவி கொடுத்தார்கள், ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள்.

ஆகாய் 1:13 அப்பொழுது கர்த்தருடைய தூதனாகிய ஆகாய், கர்த்தர் தூதனுப்பிய வார்த்தையின்படி ஜனங்களை நோக்கி: நான் உங்களோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

ஆகாய் - தொகுப்புரை

1 அதிகாரம்

ஆகாய் 1:14 பின்பு கர்த்தர் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுடைய ஆவியையும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும், ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் வந்து, தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலைசெய்தார்கள்.

ஆகாய் 1:15 தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் ஆறாம்மாதம் இருபத்து நாலாந்தேதியிலே இது நடந்தது.

"அப்பொழுது" - தேவாலயத்தை மறுபடியும் கட்ட வேண்டுமென்று தேவனுடைய கட்டளையை ஆகாய் கூறியபோது. ஜனங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கும், தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிந்தார்கள். ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள்.

"அப்பொழுது" - கர்த்தருடைய வார்த்தைக்கு ஜனங்கள் செவி கொடுத்தபோது. ஆகாய் "நான் உங்களோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்னும் கர்த்தருடைய இரண்டாம் செய்தியைக் கூறுகிறார்.

"கர்த்தர்...... செருபாபேல்...... ஆவியை.... எழுப்பினார்" - கர்த்தருடைய சப்தத்திற்குச் செவிகொடுக்கிறவர்களை அவர் தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்துவார். எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோர் தேவனுடைய செய்தியை 70 வருஷங்களாக யூதா ஜனங்களுக்குக் கூறிவந்தார்கள். ஆனால் ஜனங்கள் தேவனுடைய சப்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய சப்தத்திற்குச் செவிகொடுத்திருந்தால், அவர்களுக்கு சிறையிருப்பே உண்டாயிருந்திருக்காது. ஆனால் கர்த்தருடைய சப்தத்திற்கு அவர்கள் செவிகொடாமல் போனதினால் அவர்களுடைய தேசமே அழிந்துபோயிற்று. அந்நிய தேசத்தின் சிறையிருப்பில் இருக்கும்போது அவர்கள் கர்த்தருடைய சப்தத்திற்குப் பயத்தோடு செவிகொடுக்கிறார்கள். (ஆகாய் 1:12-15).

"தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம்" - ஆகாய் 1:13 ஆவது வசனத்தில் கூறப் பட்டிருக்கும் செய்தி இந்தத் தேதியில் கூறப் பட்டதா என்று ஒருசிலர் வினா எழுப்புகிறார்கள். ஆகாய் 1:3-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செய்தி வேறு. இந்தச் செய்தி வேறு.

2 அதிகாரம்

III. தேவாலயங்களைப் பற்றிய செய்தி

1. சாலொமோனின் தேவாலயம் பற்றியது

ஆகாய் 2:1 ஏழாம் மாதம் இருபத்தோராந்தேதியிலே ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய், கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று; அவர்:

ஆகாய் 2:2 நீ செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனோடும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனோடும், ஜனத்தில் மீதியானவர்களோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்:

ஆகாய் 2:3 இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் காண்கிறதல்லவா?

ஆகாய் 2:4 ஆனாலும் செருபாபேலே, நீ திடன் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே, நீ திடன்கொள்; தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகாய் 2:5 நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின் படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலை கொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்.

"ஏழாம் மாதம் இருபத்தோராந்தேதியிலே" - தேவாலயம் கட்டும் வேலை உற்சாகப்படுத்தப் பட்டு, ஒரு மாதமும், மூன்று நாட்களும் ஆனபின்பு (ஆகாய் 1:12-15) ஆகாய் யூதாவிற்கு மேலும் ஒரு செய்தியைக் கூறுகிறார். இது அவர் கூறும் மூன்றாவது செய்தியாகும். (ஆகாய் 2:1-9). தேவாலயம் கட்டப்படும் வேலை 9 ஆம் மாதம், 24 ஆம் தேதிக்கு முன்பாக ஆரம்பமாகவில்லை. (ஆகாய் 2:18).

"ஆனாலும்" - சாலொமோன் கட்டின தேவாலயத்தின் மகிமையை கண்டவர்கள் யாராவது இருக்கிறார்களா என்னும் கேள்வி கேட்கப்படுகிறது. அதன் பின்பு, தேவன் யூதா ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார். திடன் கொள்ளுங்கள் என்றும், தாம் அவர்களோடு கூட இருப்பதாகவும் தேவாலயத்தின் வேலையைக் கட்டுமாறும் கர்த்தர் அவர்களுக்குக் கூறி அவர்களை உற்சாகப் படுத்துகிறார். (ஆகாய் 2:4-5).

"நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கைபண்ணின வார்த்தையின்படியே" - எகிப்து தேசத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வெளியேற்றி, வழிநடத்திச் சென்றபோது அவர்களோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் மறுபடியும் புதுப்பிக்கிறார். அந்த உடன்படிக்கை கர்த்தரைப் பொறுத்தளவில் மாறவில்லை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ அதை முறித்துப் போட்டார்கள். இதன் காரணமாக இஸ்ரவேல் புத்திரர்மீது பல நியாயத்தீர்ப்புகள் வந்தன. இப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தரும் அவர்களை ஆசீர்வதிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார். தாம் பண்ணிய வாக்குத்தத்தங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கும் கர்த்தர் இப்போது ஆயத்தமாக இருக்கிறார். மனுஷர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவர் அவர்களை ஆசீர்வதிப்பார். மனுஷர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வில்லையென்றால், அவர் அவர்களைச் சபிப்பார். அவர்களுடைய முன்னோர் கர்த்தரோடு ஐக்கியம் வைத்திருந்தவர்களாக இருந்தாலும், அதிகமான பலிகளைச் செலுத்தியவர்களாக இருந்தாலும் அவர்கள் பாவம் செய்தால் அவர்களுக்குத் தண்டனை கிடைக்கும்.

2 அதிகாரம்

கர்த்தருடைய நீதிநெறிப் பிரமாணம் ஒருபோதும் மாறுவதில்லை. மனுஷனுடைய பாவம் அவனைத் தேவனிடத்திலிருந்து பிரித்துவிடும். தேவதூதர்களும் பாவம் செய்தால், அவர்களும் கர்த்தருடைய சமுகத்திலிருந்து பிரிக்கப் படுவார்கள். கர்த்தருடைய பார்வையில் பாவம் பாவமாகவே இருக்கும். பாவிகளை நியாயம் விசாரிக்கும் விஷயத்தில் கர்த்தர் ஒருபோதும் பட்சபாதம் காண்பிக்கமாட்டார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது மாறாத பிரமாணம்.

"என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்" - பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசுகிறார். தம்முடைய பழைய உடன்படிக்கையை நம்பி, அதற்குக் கீழ்ப்படிந்திருக்கும் அனைவரையும் கர்த்தர் அபிஷேகித்து ஆசீர்வதிக்கிறார். (நெகே 9:20; ஏசா 63:10-14).

2. வானத்தையும் பூமியையும் அசையப் பண்ணுவார் - (ஆப 1:10; 12:25-29; 2பேது 3:6-13; ரோம 8:19-23)

ஆகாய் 2:6 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந் தரையையும் அசையப்பண்ணுவேன்.

தீர்க்கதரிசன எண் - 1

"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்......" (ஆகாய் 2:6-9) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன். (ஆகாய் 2:6).
2. சகல ஜாதிகளையும் அசையப் பண்ணுவேன் (ஆகாய் 2:7).
3. சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்.
4. இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன்.
5. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் (ஆகாய் 2:9).
6. இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன்.

வருங்காலத்தில் பூமி புதுப்பிக்கப்படும்

வானங்களும், பூமியும் வருங்காலத்தில் மறுபடியும் புதுப்பிக்கப்படும். "இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரமல்ல வானத்தையும் அசையப்பண்ணுவேன்" (எபி 12:26-27). பூமி அக்கினியினால் புதுப்பிக்கப்படும். பூமியில் அசைகிறவைகளும், அசையாதவைகளும் இருக்கும். அசையாதவைகள் நிலைத்திருக்கும். அசைவுள்ளவைகள் மாறிப்போகும். வானமும், பூமியும் நித்தியமானவை. ஆகையினால் அவை அசையாதவை என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். (சங் 72:17; சங் 89:29-37; சங் 104:5; பிர 1:4, 2பேதுரு 3:10-13).

3. மேசியாவின் இரண்டாம் வருகையும் ஆயிர வருஷ தேவாலயமும் - (எசே 40)

ஆகாய் 2:7 சகல ஜாதிகளையும் அசையப் பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகாய் 2:8 வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

2 அதிகாரம்

ஆகாய் 2:9 முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

“சகல ஜாதிகளையும் அசையப் பண்ணுவேன்” - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் கர்த்தர் வானத்தையும், பூமியையும் புதுப்பிக்கும்போது அவர் வானங்களையும், பூமியையும் அசையப் பண்ணுவார். (ஆகாய் 2:6) ஆயிரம் வருஷ அரசாட்சியின் துவக்கத்தில் கர்த்தர் சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவார். (ஆகாய் 2:7). இந்தச் சம்பவம் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வரும்போது நடைபெறும். அப்போது கர்த்தர் இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவார். கர்த்தருடைய மகிமை செருபாபேல் கட்டிய தேவாலயத்தையோ, ஏரோது கட்டிய தேவாலயத்தையோ, வருங்கால உபத்திரவக் காலத்தின் தேவாலயத்தையோ நிறையப்பண்ண வில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியில் கட்டப்பட்டிருக்கும் தேவாலயத்தைக் கர்த்தர் தமது மகிமையினால் நிறையப் பண்ணுவார். (எசே 43:7; எசே 44:4)

“சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர்” - இந்த வாக்கியம் கர்த்தரைக் குறிப்பிடுகிறது. (1சாமு 9:20; 2நாளா 21:20). இந்த வாக்கியம் நிறைவேறும் நாளில் உலகம் முழுவதிலுமுள்ள மனுஷர் மத்தியில் சமாதானத்தின்மீதும், பாதுகாப்பின்மீதும், இரட்சிப்பின்மீதும் ஜனங்கள் தாகமாக இருப்பார்கள். கர்த்தரால் மட்டுமே மனுஷருடைய இந்தத் தாகத்தைத் தீர்த்து வைக்க முடியும்.

தங்களுடைய தாகத்தை அந்திக்கிறிஸ்து தீர்த்து வைப்பான் என்று உலக ஜனங்கள் முதலில் நினைப்பார்கள். ஆனால் அவனோ ஜனங்களை வஞ்சித்து விடுவான். அந்திக்கிறிஸ்து தன்னை தேவன் என்றும், கிறிஸ்து என்றும் கூறிக்கொள்வான். ஆனால் ஜனங்கள் மீது திடீரென்று அழிவு வரும். (1தெச 5:1-3; 2தெச 2:3-4). அந்திக்கிறிஸ்துவை நம்பின ஜனங்கள் இனிமேல் கிறிஸ்துவை நம்புவார்கள். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தங்களுக்கு சமாதானத்தையும், இரட்சிப்பையும், பாதுகாப்பையும் அருளுவார் என்று எதிர்பார்ப்பார்கள். இதனால் கர்த்தர் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவராக இருப்பார். கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையின் போது பொன்னையோ, வெள்ளியையோ தம்மோடு கொண்டுவர மாட்டார். இருளை அகற்றுவதற்கு வெளிச்சத்தையும், அறியாமையை அகற்றுவதற்கு சத்தியத்தையும், அடிமைத்தனத்தை அகற்றுவதற்கு விடுதலையையும் கொண்டுவருவார். யுத்தங்களும், கொள்ளைகளும் இருந்த இடங்களில் சமாதானமும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும் இருக்கும். இது வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்தச் சம்பவம் நிறைவேறும். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது அவர் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவராக இல்லை. ஆனால் அவருடைய இரண்டாம் வருகையின் போது அவருடைய நாளில் சகல ஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள். (ஏசா 2:2-4; மீகா 4:1-6; சக 14:9,16-21).

“இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன்” - இந்த வாக்கியமும் வருங்காலத்தில் நிறைவேறும்.(ஆகாய் 2:7-9). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கட்டப்பட்ட பிந்திய ஆலயத்தில் கர்த்தருடைய மகிமை வந்து நிறையும். ஆகாய் 2:7,9 ஆகிய வசனங்களில் “இந்த ஆலயம்” **“this house”** “பிந்தின ஆலயம்” **“this latter house”** இன்னும் இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இது செருபாபேல் கட்டிய ஆலயத்தைக் குறிக்கும். ஆயினும் பிந்தின ஆலயம் என்பதை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தருடைய நாளில் கட்டப்படும் ஆயிரம் வருஷத்து தேவாலயம் என்று பொருள்கூறுவது சிறப்பாக அமையும். ஏனெனில் முந்தின ஆலயமாகிய சாலொமோன் கட்டின தேவாலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று ஆகாய் 2:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகாய் – தொகுப்புரை

2 அதிகாரம்

ஆகையினால் இந்தப் பிந்தின ஆலயம் என்பது செருபாபேல் கட்டினதோ, அல்லது ஏரோது கட்டினதோ அல்லது உபத்திரவக்காலத்தில் கட்டப்படுவதோ அல்ல. இது ஆயிரம் வருஷத்து தேவாலயத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது இந்தப் பிந்தின தேவாலயத்தைக் கட்டுவார். (எசே 43:1-7; எசே 44:4; சக 6:12-13).

IV. ஆசாரியர்களுக்குச் செய்தி

1. கேள்விகள் – சரியான பதில்கள்

ஆகாய் 2:10 தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே, ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று; அவர்:

ஆகாய் 2:11 ஒருவன் தன் வஸ்திரத்தின் தொங்கலிலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டுபோகையில் தன் வஸ்திரத்தின் தொங்கல் அப்பத்தையாகிலும், சாதத்தையாகிலும் திராட்ச ரசத்தையாகிலும், எண்ணெயையாகிலும், மற்றெந்த போஜன பதார்த்தத்தையாகிலும் தொட்டால் அது பரிசுத்தமாகுமோ என்று நீ ஆசாரியரிடத்தில் வேத நியாயத்தைப் பற்றிக் கேள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

ஆகாய் 2:12 அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: பரிசுத்தமாகாது என்றார்கள்.

ஆகாய் 2:13 பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால், அது தீட்டுப்படுமோ என்று ஆகாய் பின்னும் கேட்டான்; அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: தீட்டுப்படும் என்றார்கள்.

“தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே” - ஆகாய் கூறிய நான்காவது செய்தி. (ஆகாய் 1:1).

“அது பரிசுத்தமாகுமோ” - ஆசாரிய ஊழியம் செய்கிறவன் தன்னுடைய ஆசாரிய ஊழியத்தை மறுபடியும் செய்வதற்கு முன்பாகத் தன்னைப் பிரமாணத்தின்படி சுத்திகரித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தீட்டுப்பட்டிருக்கிறவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும்.

2. யூதாவிற்குப் பொருந்தும்

ஆகாய் 2:14 அப்பொழுது ஆகாய்: அப்படியே அந்த ஜனங்களும் இந்த ஜாதியாரும் என் சமுகத்தில் இருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களுடைய கைகளின் எல்லாக் கிரியைகளும் அப்படியே இருக்கிறது; அவர்கள் அங்கே கொண்டுவந்து படைக்கிறதும் தீட்டுப்பட்டிருக்கிறது.

ஆகாய் 2:15 இப்போதும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படி ஒரு கல்லின் மேல் ஒரு கல் வைக்கப்பட்டது முதல் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள்.

ஆகாய் 2:16 அந்த நாட்கள் முதல் ஒருவன் இருபது மரக்காலாகக் கண்ட அம்பாரத்தினிடத்தில் வந்தபோது, பத்து மரக்கால்மாத்திரம் இருந்தது; ஒருவன் ஆலையின் தொட்டியில் ஐம்பது குடம் மொள்ள ஆலையினிடத்திலே வந்தபோது இருபது குடம்மாத்திரம் இருந்தது.

ஆகாய் 2:17 கருக்காயினாலும் விஷப்பனியினாலும் கல்மழையினாலும் உங்களை உங்கள் கைகளின் வேலையிலெல்லாம் அடித்தேன்; ஆனாலும் நீங்கள் என்னிடத்தில் மனதைத் திரும்பாமல்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2 அதிகாரம்

ஆகாய் 2:18 இப்போதும் இதற்கு முந்தின காலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்பாருங்கள்; ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந் தேதியாகிய இந்நாள்முதல் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்ட அந்நாள் வரைக்கும் சென்ற காலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்பாருங்கள்.

ஆகாய் 2:19 களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச் செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனி கொடுக்கவில்லையே; நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான்.

“அப்பொழுது ஆகாய்” - தீட்டுப்படுவதைக் குறித்து ஆசாரியர்கள் தீர்மானமான பதிலைக் கூறுகிறார்கள். அதன் பின்பு, ஆகாய், அந்தத் தீட்டை இஸ்ரவேல் ஜனத்தாருக்குப் பொருந்துமாறு கூறுகிறார். அப்படியே இந்த இஸ்ரவேல் ஜனங்களும், இந்த ஜாதியாரும் கர்த்தருடைய சமுகத்தில் தீட்டாக இருக்கிறார்கள். அவர்களுடைய கைகளின் கிரியைகளும், அவர்களுடைய படைப்புகளும் தீட்டாக உள்ளன. ஆயினும் இன்றுமுதல் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப் பண்ணுகிறார். (ஆகாய் 2:15-19).

“பத்து மரக்கால் மாத்திரம் இருந்தது” - இந்த வாக்கியம் இஸ்ரவேல் ஜனத்தார்மீது இருக்கும் சாபத்தை விளக்குகிறது. தேவாலயத்தைக் கட்டுவதற்கு ஜனங்கள் கீழ்ப்படியும் வரையிலும் அவர்கள்மீது சாபம் இருந்தது. (ஆகாய் 2:16-17) இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வில்லையென்றால் இதுபோன்ற சாபம் வருமென்று மோசேயும் கூறியிருக்கிறார். (உபா 28:22).

தீர்க்கதரிசன எண் - 2

“இப்போதும் இதற்கு முந்தின காலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள்.......” (ஆகாய் 2:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்ட அந்த நாளுக்கு முன்பு இஸ்ரவேல் ஜனத்தார்மீது சாபம் இருந்தது. அந்த நாளுக்குப் பின்பு, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். கீழ்ப்படிதலுக்குக் கர்த்தர் ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணியிருக்கிறார். (லேவி 26, உபா 28)

“ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதி” - இந்த நாளில் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்டது.

“நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்” - பல சமயங்களில் தனி மனுஷருடைய ஜீவியங்களைக் கர்த்தர் ஒரு குறிப்பிட்ட நாளில் ஆசீர்வதிக்கிறார். (யோசு 3:7) இங்கு ஒரு தேசம் முழுவதையுமே இந்த நாள் முதல் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். (யாத் 12:14; உபா 2:25).

V. புறஜாதி தேசங்களை அகற்ற மேசியாவின் இரண்டாம் வருகை

ஆகாய் 2:20 இருபத்துநாலாந் தேதியாகிய அந்நாளிலே கர்த்தருடைய வார்த்தை இரண்டாம் விசை ஆகாய் என்பவனுக்கு உண்டாகி, அவர்:

ஆகாய் 2:21 நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி,

ஆகாய் 2:22 ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து, இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப் போடுவேன்; குதிரைகளோடே அவைகளின் மேல் ஏறியிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள்.

2 அதிகாரம்

ஆகாய் 2:23 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாம் விசை ஆகாய் என்பவனுக்கு உண்டாகி" - இது இஸ்ரவேல் புத்திரருக்கு ஆகாய் கூறும் ஐந்தாவது செய்தியாகும். இதுவே அவருடைய கடைசி செய்தியாகும். (ஆகாய் 1:1). கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்ட நாளில் ஆகாய் இந்தச் செய்தியைக் கூறுகிறார். (ஆகாய் 2:18,20).

தீர்க்கதரிசன எண் - 3

"நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியது என்னவென்றால்......" (ஆகாய் 2:21-23) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. நான் வானத்தையும் பூமியையும் அசையப் பண்ணுவேன். (ஆகாய் 2:21).
2. ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்ப்பேன். (ஆகாய் 2:22).
3. ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழிப்பேன்.
4. இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப் போடுவேன்.
5. குதிரைகளோடே அவைகளின்மேல் ஏறியிருப்பவர்களையும் கவிழ்ப்பேன்.
6. அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள்.
7. செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக் காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக் கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் . நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். (ஆகாய் 2:23).

"நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி" - வானத்தையும், பூமியையும் அசையப்பண்ணும் சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தருடைய நாளில் நடைபெறும். அதற்கு முன்பு உபத்திரவக்காலத்திலும் இந்தச் சம்பவம் நடைபெறும். (வெளி 6:12-17; வெளி 16:17-21) இந்தச் சம்பவம் மறுபடியும் வானமும், பூமியும் புதுப்பிக்கப்படும்போது நடைபெறும். (ஆகாய் 2:6; எபி 1:10-12; எபி 12:26-27; 2பேதுரு 3:10-13)

"ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து" - ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்ப்பதும், ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழிப்பதும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் சம்பவங்களாகும். அப்போது அவர் இந்தப் பூமியிலுள்ள ராஜ்யங்களையெல்லாம் தம் வசமாக்குவார். (ஏசா 63:1-5; எசே 38-39; சக 14; லூக்கா 1:32-33; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).

"அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள்." - பலர் இவ்வாறு அழிந்து போவார்கள். (சக 14:12-13). "அவரவர்" என்பது அநேகரைக் குறிக்கும் பொதுவான வார்த்தையாகும். (ஆதி 41:56)

ஆகாய் – தொகுப்புரை

2 அதிகாரம்

"நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்" - யூதாவின் தலைவனாகிய செருபாபேலைக் கர்த்தர் தெரிந்துகொண்டார். செருபாபேலைக் கர்த்தர் தம்முடைய முத்திரை மோதிரமாகத் தெரிந்துகொண்டார். சிறையிருப்புக்குப் பின்பு இஸ்ரவேலுக்கு ராஜா யாரும் நியமிக்கப்பட வில்லை. ஆகையினால் செருபாபேல் இங்கு "தலைவர்" 'ஞர்ஸ்ங்ழ்ர்ழ்' என்று அழைக்கப் படுகிறார். (ஆகாய் 1:1,14; ஆகாய் 2:2,21; சக 9:7; சக 12:5-6). யோயாக்கீன் அல்லது எகொனியாவின் வம்சத்தில் யாரும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்ந்து ராஜாவாக ஆட்சி புரிவதில்லை என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறிற்று. (எரே 22:30) இஸ்ரவேல் புத்திரர் பலகாலமாக ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலிகள் இல்லாமலும் ஏபோத், தேராபீம் ஆகியவை இல்லாமலும் இருக்கிறார்கள். மேசியாவின் காலத்தில் அவர்கள் மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படும் வரையிலும் அவர்களுக்கு ராஜாவாக யாரும் இருக்கமாட்டார்கள். (ஓசி 3:4-5; அப் 15:13-18).

புத்தகத்தலைப்பின் முக்கியத்துவம்

புத்தகத்தின் ஆசிரியரான ஆகாய் என்னும் பெயரே இந்தப் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

மிகச் சிறிய அதிகாரம்

1 (15 வசனங்கள்)

மிக நீண்ட அதிகாரம்

2 (23 வசனம்)

மொத்த அதிகாரங்கள்: 2

முக்கிய வேதவசனம்

"நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்கிறார்." (ஆகாய 1:8)

முன்னுரை

ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய தீர்க்கதரிசிகள் எஸ்றா, நெகேமியா எஸ்தர் ஆகியோரின் காலங்களுடன் சம்மந்தப் பட்டவர்கள் ஆவார்கள். ஆகாஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகமானது தேவனுடைய ஆலயத்தை மறுபடியும் கட்டும்படி உற்சாகமூட்டும் வார்த்தைகளடங்கிய புத்தகமாகும். நான்கு வெவ்வேறு காலங்களில் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

1. ஆறாம் மாதம் (செப்டம்பர்) முதல் நாளில் (1:1)
2. ஏழாம் மாதம் (அக்டோபர்) 21-ம் நாள் (2:1)
3. ஒன்பதாம் மாதம் (டிசம்பர்) 24ம் நாள் (2:10)
4. ஒன்பதாம் மாதம் (டிசம்பர்) 24ம் நாள் (2:20)

ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் தரியு ராஜாவின் இரண்டாம் வருஷ ஆட்சிக்காலத்தில் உரைக்கப்பட்டது. ஆகையினால் சுமார் நான்கு மாதங்கள் ஆகாய் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்திருக்க வேண்டும்.

புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை

1. தேவாலத்தைக் கட்டுமாறு ஆகாயின் கட்டளையும், ஜனங்கள் அதற்குச் செவி கொடுத்தலும் (அதிகாரம் 1)
2. ஆகாயின் மூலமாக தேவன் ஜனங்களை வேலை செய்ய உற்சாகப் படுத்துகிறார் (அதிகாரம் 2)